M

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2019

## பன்னிரெண்டாம் வகுப்பு

## வணிகவியல்

நேரம்: 2.30 மணி

பதிவு எண் :

மதிப்பெண்கள்: 90

பிரிவு - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 20 x 1 = 20

1. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது
   a) விரைவாக b) தாமதமாக c) இரண்டுமில்லை
2. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்ற தொழில்கள்
   a) பேரளவு வியாபாரம் b) நடுத்தர வியாபாரம் c) சிற்றளவு வியாபாரம்
3. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு
   a) பூரண நல்ல நம்பிக்கை b) முதலீட்டிற்கான தொகை இருத்தல் c) கூடி தொழில் செய்ய விருப்பம்
4. கூட்டாண்மையில் தோன்றும் உறவுமுறை
   a) முதல்வர் மற்றும் முகவர் b) உரிமையர் மற்றும் வேலையாளர் c) எஜமானர் மற்றும் பணியாளர்
5. பங்குகளை ஒறுப்பிழப்பு (பறிமுதல்) செய்யக் காரணம்
   a) நிறுமத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த மறுத்தல்
   b) தொடர்ந்து நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருப்பது
   c) அழைப்புப் பணத்தைச் செலுத்தத் தவறுவது
   d) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வன்முறைச் செயல்களில் ஈடுபடுதல்
6. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.
   a) 90 நாட்கள் b) 120 நாட்கள் c) 130 நாட்கள் d) 60 நாட்கள்
7. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை -A (Table-A) என்பது
   a) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி b) இருப்புநிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
   c) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி d) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
8. கீழ்க்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர்?
   a) நிறுமம் இலாபம் ஈட்டும் பொழுது b) பங்குநர்கள் பங்காதாயம் பெறும் பொழுது
   c) நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்
   d) மேற்சொன்ன அனைத்து சூழ்நிலைகளிலும்
9. கீழ்க்கண்ட நிறுமங்களுள் எது சட்டமுறைக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்?
   a) சட்டமுறை நிறுமங்கள் b) தனிவரையறை நிறுமங்கள்
   c) பொதுவரையறை நிறுமங்கள் d) பட்டய நிறுமங்கள்
10. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது?
    a) தணிக்கையர் நியமனம் b) கடனீட்டுப் பத்திர வெளியீடு
    c) பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல் d) பங்காதாயம் விளம்பப்படல்
11. ஒரு இயக்குநர் a) நிறுமத்தின் முகவராக
    b) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக
    c) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக d) மேற்சொன்ன அனைத்துமாக செயலாற்றுகிறார்
12. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை a) பொது விடுப்புகள்
    b) விற்பனைக்கான தருமொழி c) மேலாண்மைத் தரகர்கள் d) ஒப்புறுதியளித்தல்
13. எதிலும் கேட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர்
    a) கலைமான் b) கரடி c) காளை d) முட வாத்து
14. செபி இச்சட்டப்படி உருவாக்கப்பட்டது. a) பத்திரங்கள் ஒப்பந்தச் (ஒழுங்குபடுத்துதல்) சட்டம்
    b) இந்தியப் பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியச் சட்டம்
    c) நிறுமங்கள் சட்டம் d) இந்திய அரசியல் சாசனம்
15. பங்கு மாற்றகம் இதற்கான ஒரு இடமாகும்.
    a) ஒரு பத்திரத்தை மற்றொரு பத்திரமாக மாற்றுவது b) நிதிப்பத்திரங்களை வாங்கி விற்பது
    c) புதுப்பங்குகளை வெளியிடுவது d) சரக்குகளை வாங்கி விற்பது
16. பங்காதாயம் கூட்டுறவில் _______ அடிப்படையில் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
    a) பங்கு முதல் b) பங்குகள் வாங்கிய எண்ணிக்கையில்
    c) ஆதரவின் அடிப்படையில் d) இவை எதுவும் இல்லை

17. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது
a) கடன் b) சேவை c) சரக்குகள் d) ரொக்கம்
18. சிறுபான்மையினர் நலத்தைப் பாதுகாக்கும் தொழில் அமைப்பு
a) தனி வணிகம் b) கூட்டாண்மை c) கூட்டுறவு சங்கங்கள் d) பொது நிறுமம்
19. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்சப் பங்கு முதல்
a) 51 விழுக்காடு b) 60 விழுக்காடு c) 75 விழுக்காடு d) 90 விழுக்காடு
20. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு a) துறைவாரி அமைப்பாகும் b) பொதுக்கழகமாகும் c) அரசு நிறுமமாகும் d) இவை எதுவும் இல்லை

பிரிவு - ஆ

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 21 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. தரவரிசை முறைக் கோட்பாடு என்றால் என்ன?
22. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
23. கூட்டாளிகளிடையே நிலவும் உறவுமுறை யாது?
24. அரசு நிறுமம் என்றால் என்ன?
25. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?
26. நிகழ்ச்சி நிரல் என்றால் என்ன?
27. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
28. தகவலறிக்கை என்பது எது?
29. பட்டியலிடுதல் என்றால் என்ன?
30. கூட்டுறவு - வரையறு.

பிரிவு - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 31 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. வாரிய அமைப்பிற்கு ஏதேனும் மூன்று உதாரணம் தருக.
32. தனியாள் வணிக அமைப்பின் நன்மைகள் ஏதேனும் மூன்று தருக.
33. உரிமை வயது அடையுமுன் இளவரின் நிலை என்ன?
34. பிடிப்பு நிறுமம் மற்றும் துணை நிறுமம் என்றால் என்ன?
35. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன? உதாரணம் தருக.
36. சிறுகுறிப்பு வரைக: அ) நிகழ்ச்சி நிரல் ஆ) நிகழ்ச்சிக் குறிப்பு
37. ஊக வணிகர்களின் வகைகளை ஏதேனும் இரண்டு தருக.
38. கூட்டுறவு அமைப்பின் நன்மைகள் ஏதேனும் மூன்று தருக.
39. அரசு தொழில்துறையில் நேரடியாகத் தலையிட வேண்டிய கட்டாயமென்ன?
40. சிறுகுறிப்பு வரைக : அ) பொதுக்கழகம் ஆ) துறைவாரி அமைப்பு

பிரிவு - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. அமைப்பின் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்து எழுதுக. *(அல்லது)*
பொதுக் கழகத்தின் இயல்புகளை விளக்குக.
42. தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை? *(அல்லது)*
கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்து தருக.
43. கூட்டாளிகளின் வகைகளில் ஏதேனும் ஐந்து விளக்குக. *(அல்லது)*
ஊக வணிகர் என்பவர் யார்? அதன் வகைகளை விளக்குக.
44. தனி நிறுமத்திற்கும் பொது நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்து தருக. *(அல்லது)*
தனியார் துறைக்கும் பொதுத்துறைக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்து தருக.
45. கடனீட்டுப் பத்திரங்களின் வகைகளில் ஏதேனும் ஐந்து எழுதுக. *(அல்லது)*
பன்னாட்டு நிறுமம் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.
46. பங்கு மாற்றகத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்து தருக. *(அல்லது)*
அரசுத் தொழில்களின் நோக்கங்களில் ஏதேனும் ஐந்து எழுதுக.
47. சட்டமுறை அறிக்கை என்றால் என்ன? சட்டமுறை அறிக்கையில் காணப்பெற வேண்டியவை யாவை? *(அல்லது)*
கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்து எழுதுக.

******